பெரம்பலூரில் அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

பெரம்பலூர், நவ. 4: தவெக அரசைக் கண்டித்து, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரகம் எதிரே அரசு ஊழியர் சங்கத்தினர் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு, அச்சங்கத்தின் மாவட்டத் தலைவர் த. கருணாகரன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் சி. சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். சாலைப் பணியாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் பெ. ராஜ்குமார், நெடுஞ்சாலை துறை ஊழியர் சங்க மாவட்ட அமைப்பாளர் ஜெ. ராஜதுரை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதி ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் க. மணிமாறன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் மீது வழங்கியுள்ள குற்றக் குறிப்பாணைகளை ரத்து செய்ய வேண்டும்.

அரசு ஊழியர்களின் உரிமைகளுக்கு எதிராக பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத்துறை இயக்குநரின் சுற்றறிக்கையைக் கண்டித்தும், தவெக அரசு தமிழ்நாடு தேர்வாணையம் மற்றும் வெளிநாட்டுக்கு ஆள் எடுக்கும் நிறுவனம் மூலம், தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளுக்குமான அரசுப் பணிக்கு, அவுட்சோர்சிங் முறையில் பணியாளர்களை நியமிப்பதாக அரசிதழில் வெளியிட்டுள்ளதைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் முழக்கமிட்டனர். இதில், அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் பலர் பங்கேற்றனர்.

முன்னதாக, மாவட்ட இணைச் செயலர் பி. தூரிகை வேந்தன் வரவேற்றார். நிறைவாக, மாவட்ட இணைச் செயலர் த. இளையராஜா நன்றி கூறினார்.

கரூர் கோயில் நிலங்களை பத்திரப் பதிவு செய்ய உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை

மதுரை, நவ. 4: கரூரில் கோயில் நிலங்களை பத்திரப் பதிவு செய்ய இடைக்காலத் தடை விதித்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு புதன்கிழமை உத்தரவிட்டது.



சேலத்தைச் சேர்ந்த திருத்தொண்டர்கள் சபை அறக்கட்டளை அறங்காவலர் ராதாகிருஷ்ணன், சென்னையைச் சேர்ந்த டி.ஆர். ரமேஷ், செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பாஸ்கர் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தனித்தனியே தாக்கல் செய்த மனுக்கள்: கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பாலசுப்பிரமணியர், கல்யாண பசுபதீசுவரர், ரவீசுவரர், குப்புச்சிபாளையம் விக்ருதீசுவரர் கோயில்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்புள்ள 3,085 ஏக்கர் நிலங்கள் 15 கிராமங்களில் உள்ளன. இந்த நிலங்களுக்கு பத்திரப் பதிவு செய்ய பதிவுத் துறை தரப்பில் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், 3,085 ஏக்கர் பட்டா நிலங்களின் பத்திரப் பதிவுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கி, தமிழக அரசு அண்மையில் அரசாணை பிறப்பித்தது. இதனால், கோயில் நிலங்களை தனிநபர்களுக்கு பட்டா மாறுதல் செய்து பத்திரப் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த அரசாணையை ரத்து செய்தும், சம்பந்தப்பட்ட இடங்களின் பத்திரப் பதிவுக்குத் தடை விதித்தும் உத்தரவிட வேண்டும் என அவர்கள் கோரினர்.

இந்த மனுக்கள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் பி. வேல்முருகன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வு முன் புதன்கிழமை விசாரணைக்கு வந்தன. அப்போது, மனுதாரர் ராதாகிருஷ்ணன் முன்னிலையாகி, கோயில் நிலங்களைப் பதிவு செய்ய பலர் பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களில் விண்ணப்பித்து காத்திருக்கின்றனர். இதனால், பத்திரப் பதிவுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றார்.

அப்போது, அரசுத் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர்கள், கோயில் நிலங்களை மீண்டும் அரசு வசப்படுத்தவும், அவற்றை உரிமையாளர்களுக்கு வழங்குவது தொடர்பாக விசாரணை நடத்தி உத்தரவு பிறப்பிக்கவும் மாவட்ட ஆட்சியருக்கு சட்டப்படி அதிகாரம் உள்ளது என்றனர். பின்னர், கோயில் நிலங்களைப் பத்திரப் பதிவு செய்வதற்கு அரசு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க என்ன காரணம் என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: இந்த மனு தொடர்பாக அரசுத் தரப்பில் விரிவான பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு விசாரணை வருகிற 24-ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. அதுவரை கரூர் கோயில் நிலங்களின் பத்திரப் பதிவுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

புகழூர் நகராட்சி ஆணையர், மேலாளரைக் கண்டித்து தலைவர், துணைத் தலைவர் உள்ளிருப்புப் போராட்டம்

கரூர்,நவ.4: புகழூர் நகராட்சி ஆணையர் மற்றும் மேலாளரை பணியிடம் மாற்றக் கோரி நகராட்சித் தலைவர் தலைமையில் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் புதன்கிழமை உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கரூர் மாவட்டம், புகழூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் புதன்கிழமை நகர்மன்றத் தலைவர் சேகர் என்கிற குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. ஆணையர் வெங்கடாஜலபதி, துணைத்தலைவர் பிரதாபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து கூட்டத்தில் உறுப்பினர்கள் பேசுகையில், கடந்த 5 மாதங்களுக்கு முன் ஆணையராக பொறுப்பேற்ற வெங்கடாஜலபதி மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக பொதுமக்களின் கோரிக்கைகள் எதற்கும் உரிய நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதாகவும், கடந்த திமுக ஆட்சியில் புகழிமலை பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனை பட்டாக்களை மீண்டும் ஆய்வு செய்ய வேண்டும்



புகழூர் நகராட்சி கூட்டரங்கில் புதன்கிழமை உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட நகர்மன்றத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள்.

என்று ஆணையர் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், தூய்மைப் பணியாளர்களை ஒருமையில் பேசுவதுடன் அவர்களை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் உறவினர் வீட்டில் வேலை செய்ய பயன்படுத்துவதாகவும் தெரியவந்துள்ளது என்றனர்.

அப்போது உறுப்பினர்களின் கேள்விக்கு ஆணையர் வெங்கடாஜலபதி மறுப்பு தெரிவித்ததால் ஆணையருக்கும், நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பின்னர் ஆணையர் மற்றும் மேலாளரையும் பணியிட மாற்றம் செய்யக்கோரி நகர்மன்றத் தலைவர் சேகர் என்கிற குணசேகரன் தலைமையில் துணைத் தலைவர் பிரதாபன் மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் கூட்டரங்கில் அமர்ந்து உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் திமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் மற்றும் பாஜக வைச் சேர்ந்த 22 நகராட்சி உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

கரூர் மாவட்ட எஸ்.பி.பொறுப்பேற்பு

கரூர், நவ.4: கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பி. ரகுபதி புதன்கிழமை பொறுப் பேற்றார்.



கரூர் மாவட்ட காவல் கண்காணிப் பாளராக பணியாற்றிய டி.என்.ஹரிகிரண்பிரசாத் பணியிட மாற்றம் செய்யப்பட்டதையடுத்து, சென்னை தாம்பரம் காவல் ஆணையரகத்தின் பள்ளிக்கரணை துணை ஆணையராக பணியாற்றி வந்த பி.ரகுபதி கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பி. ரகுபதி புதன்கிழமை பொறுப் பேற்றுக்கொண்ட பிறகு செய்தியாளர்களிடம் கூறியது: சட்டம்- ஒழுங்கு சிறந்த முறையில் பராமரிக்கப்படும். குற்றங்களை தடுக்க மாவட்டத்தில் முக்கியமான இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இணையவழி குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளோம். பொதுமக்கள் எவ்வித அச்சமும் இன்றி காவல்நிலையங்களை அணுகி புகார் மனு அளிக்கலாம். அந்த மனுக்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

கரூர்

மாவட்ட நிர்வாகம்: வெற்றி சிறப்பு காய் கறி தொகுப்பு விற்பனை தொடக்கம், கரூர் 80 அடி சாலை, செங்குந்தபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, காலை 9 .

கரூர் மாநகர் மற்றும் மாவட்டத்தில் உள்ள இடங்களில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகள் மற்றும் அது தொடர்பான புகைப்படங்களை கீழ்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், நிகழ்ச்சியில் பங்கேற்போர், வாசகர்கள் அனுப்பலாம்.

arulmanase@gmail.com

அரியலூர்

அரியலூர் மாவட்டத்தில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகள் மற்றும் அது தொடர்பான புகைப் படங்களை கீழ்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், நிகழ்ச்சியில் பங்கேற்போர், வாசகர்கள் அனுப்பலாம்.

dinamanishan@gmail.com

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகள் மற்றும் அது தொடர்பான புகைப் படங்களை கீழ்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், நிகழ்ச்சியில் பங்கேற்போர், வாசகர்கள் அனுப்பலாம்.

dharmaanews@gmail.com

HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்:ராதிகா, 2-வது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்கபுரா, அகமதாபாத் - 09.
கிளை அலுவலகம்: HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் , எண்.36/71, முதல் தளம், சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி-620 003. இணையதளம்: www.hdbfs.com, மின்னஞ்சல்: Compliance@hdfs.com

கேட்பு அறிவிப்பு SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(2)-ன் கீழ்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் மற்றும் கூட்டு விண்ணப்ப தாரர்களாகிய நீங்கள் , எமது நிறுவனத்திடம் கடனுக்கு ஈடாக பின்வரும் சொத்துகளை அடமானம் வைத்து எமது கிளையில், கடன் வசதியை பெற்றுள்ளீர்கள். நிறுவனத்தின் ஆவணங்கள் படி, கடனைத் திருப்பி செலுத்துவதில் சீரற்ற நிலை காணப்படுகிறது. கடன்கணக்கு முறையாகத் திருப்பிச் செலுத்தப்படாததால், நிறுவனத்தின் கணக்கு புத்தகங்களில் உங்கள் கடன் கணக்கு, வாராக் கடன் (NPA) என்ற நிலையில் உள்ளது. கடனைத் திருப்பிச் செலுத்துவதில் பலமுறை தவறியுள்ளபடியால், கடனைத் திருப்பி செலுத்துமாறு கோரும் அறிவிப்பு வழங்கியதன்படி ஒப்பந்தம் இடை நிறுத்தப்பட்டுவிட்டது என்ற தகவலும் உங்கள் அனைவருக்கும் நிறுவனம் தெரிவித்துவிட்டது. எனினும், கடனைச் செலுத்திக் கடன் கணக்கை முடிப்பது தொடர்பாக எந்தவித முயற்சியையும் நீங்கள் எடுக்காமல் தொடர்ந்து இருந்து வருகிறீர்கள் . எனவே, கடன் பாக்கிகளை வசூலிப்பதற்காக SARFAESI சட்டம் 2002, பிரிவு 13 (2)-ன் கீழ் கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அனுப்பப்பட்ட அறிவிப்பு பட்டுவாடா ஆகாமல் திரும்பி வந்துவிட்டது என்பதால் மேற்படி சட்டம் பிரிவு 13 (2)-ன் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கூடுதீட்டுக் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3(1) கீழ் கேட்பு அறிவிப்பின் விவரங்கள் மாற்று முறையில் இங்கு விண்ணப்பதாரர் மற்றும் கூட்டு விண்ணப்பதாரர்களுக்கு வெளியிடப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் மற்றும் கூட்டு விண்ணப்பதாரர்கள் / ஜாமீன்தார்கள் பெயர்கள் அவர்களின் கடன் பாக்கி, கடனுக்கு ஈடான சொத்துகள் பின்வருமாறு:

1.விண்ணப்பதாரர்கள் மற்றும் கூட்டு விண்ணப்பதாரர்கள் பெயர்:1. பாலச்சந்திரன் கீதா, எண் 37, வடக்கு பிரதட்சணம் சாலை, கரூர் அஞ்சல் மற்றும் மாவட்டம்- 639001, கரூர் H.O- 639001, தமிழ்நாடு. **மேலும்,** பழைய கதவு எண் 46E, புதிய கதவு எண் 92, T S எண் 2339, 2340, வார்டு 1, பிளாக் 46, கரூர் மாவட்டம்-639003, கரூர் HO- 639001. **2.திருமலைசாமி பாலச்சந்திரன்,** எண் 37,வடக்கு பிரதட்சணம் சாலை, கரூர் அஞ்சல் மற்றும் மாவட்டம்- 639001, கரூர் H.O-639001, தமிழ்நாடு. **2.கடன் A/c எண்.70794542, 3.அனுமதித்த கடன் தொகை-ரூ.3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி மட்டும்). 4.கோரிக்கை அறிவிப்பு தேதி:17.10.2026, 5.NPA தேதி: 02.10.2026, 6.நிலுவையில் உள்ள தொகை:ரூ.2,99,16,560.60/-**(ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று ஒன்பது லட்சத்து பதினாறாயிரத்து ஐந்நூற்று அறுபது மற்றும் அறுபது பைசா மட்டும்) **12.10.2026 அன்றுள்ளபடி** மற்றும் அத்தொகை உண்மையில் செலுத்தப்படும் வரையான ஒப்பந்த வீதத்தில் அமைந்த வட்டி, எதிர்பாரா செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளைச் சேர்த்து.

கடனுக்கு ஈடான சொத்து விவரம்: கடனுக்கு ஈடான சொத்து அட்டவணை-I: சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், அவைவிடம் கரூர் வருவாய் மாவட்டம், கரூர் பதிவு மாவட்டம், மேல கரூர் சார்-பதிவு மாவட்டம், மேல கரூர் சார்-பதிவாளர் அலுவலகம், கரூர் டவுன் வார்டு I, கரூர் வட்டம், 1-வது பிரிவு, 8-வது பிரிவு, பழைய சர்வே எண்கள் 2339 மற்றும் 2340 ஆகியவற்றில் அமைந்துள்ள 6000 சதுர அடி நிலம். சொத்தின் அளவுகள்: வடக்கு பக்கத்தில் கிழக்கு-மேற்காக 98 அடி, தெற்கு பக்கத்தில் கிழக்கு-மேற்காக 102 அடி, இரு பக்கங்களிலும் வடக்கு-தெற்காக 60 அடி. மொத்தம் 6000 சதுர அடி நிலப்பரப்பில், கதவு எண் 46E (O) எண் 92/1 (N) 46E (O) கொண்ட ஆர்.சி.சி (RCC) கட்டிடம் உள்ளது. இதற்கு சொத்து வரி மதிப்பீட்டு எண்கள்: 082/036/901711, 082/036/900549 மற்றும் 082/036/900845; குடிநீர் இணைப்பு எண்கள் 082-029-00543 மற்றும் 082-029-00273; மின் இணைப்பு எண்கள் 06-001-014-232, 06-001-014-959, 06-001-014-961, 06-001-014-962, 06-001-014-227, 06-001-014-843, 06-001-014-686, 06-001-014-842, 06-001-014-785 மற்றும் 06-001-014-843 ஆகியவை ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், இதில் நடப்பாதை வசதி மற்றும் இதர ஈஸ்மென்ட் உரிமைகள் அடங்கும். இந்தச் சொத்தின் நான்கு எல்லைகள் பின்வருமாறு: 6000 சதுர அடி நிலப்பரப்பு. ஈஸ்மென்ட் உரிமைகள் மற்றும் பாதையுடன் கூடிய இந்தச் சொத்தின் நான்கு எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு** - ராமசாமிக்குச் சொந்தமான மனை; **தெற்கு**- சண்முகம், ராமசாமி மற்றும் கிருஷ்ணராஜ் ஆகியோருக்குச் சொந்தமான சொத்து; **கிழக்கு** - 30 அடி அகலமுள்ள வடக்கு-தெற்கு சாலை; **மேற்கு** - T.S. No. 2341-இல் உள்ள நிலம். இந்தச் சொத்து கரூர் மாவட்டம், கரூர் வட்டம், கரூர் சார்-பதிவாளர் மாவட்டம் மற்றும் மேல கரூர் பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட கரூர் டவுன் வார்டு-1-இல் அமைந்துள்ளது. தற்போது இந்தச் சொத்து வார்டு எண்:1, பிளாக் எண்: 46, T.S. No: 2339 மற்றும் 2340/3 ஆகியவற்றில் அமைந்துள்ளது. **கடனுக்கு ஈடான சொத்து அட்டவணை-II:** சொத்து விவரம்-கரூர் பதிவு மாவட்டம், மேலகரூர் சார்பதிவாளர் அலுவலகம், கரூர் டவுன், L.N.S கிராமம், பழைய சர்வே எண் 515/A, தற்போது பிளாக்-2, வார்டு 3, T.S.No: 30/1B (வடக்கு பிரதக்ஷணம் சாலை) ஆகியவற்றில் அமைந்துள்ள 1620 சதுர அடி பரப்பளவு கொண்ட சொத்து. இதன் எல்லைகள் பின்வருமாறு: இணம் எண் 1:- D S. மணி ஐயர் என்பவருக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு கிழக்கு; 2 1/4 அடி x 67 1/2 அடி அளவுள்ள பொதுவான கிழக்கு-மேற்கு வழிப்பாதைக்கு தெற்கு; ரங்கநாயகி என்பவருக்குச் சொந்தமான சொத்து மற்றும் சண்முக முதலியார் என்பவருக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு மேற்கு; வடக்கு- (எல்லை விவரம்). கிழக்கு-மேற்காக இரு பக்கங்களிலும் 35 அடி, தெற்கு-வடக்காக இரு பக்கங்களிலும் 24 அடி நீளமும், மொத்தம் 840 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள கட்டிடம்.

எனவே இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் மேற்காணும் உங்களது கடன் பொறுப்புகளை முழுமையாக தீர்க்குமாறு நிறுவனம் கேட்டுக்கொள்கிறது. நீங்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மேற்படி கடன் பாக்கியுடன், ஒப்புக்கொள்ளப்பட்ட வீதத்தில் வட்டி, செலவுகள், கட்டணங்கள், எதிர்பாரா செலவினங்கள் ஆகியவற்றை சேர்த்து செலுத்தவேண்டியது. கடனுக்கு ஈடான அடமான சொத்தினை மீட்பதற்கான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13 உட்பிரிவு 8-ன் ஏரத்துகளை கடன்தாரர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். மேற்படி சட்டம் 13(13) பிரிவைக் கடைப் பிடிக்காமல் போனால் அது மேற்படி சட்டம் பரிவு 29-ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். மேற்படி அட்டவணையில் உள்ள அடமான சொத்துகளை, நிறுவனத்தின் எழுத்து மூலமான ஒப்புதல் இல்லாமல் விற்பனை, குத்தகை அல்லது இதர வழிமுறைகளில் உரிமைமாற்றித் தரக்கூடாது.

நாள்: 03.11.2026 ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம்: திருச்சி HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் -க்காக

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம்: எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001. மின்னஞ்சல்: crmd@cityunionbank.in, போன்: 0435-2432322, கமர்சல்: 0435-2431746

அசையா சொத்து ஏல விற்பனை அறிவிப்பு

பத்திரப்படுத்துதல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுசீரமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (SARFAESI Act, 2002) மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 9(1) & 9(1)-ன் கீழ் அசையா சொத்துக்களின் மீள் ஏலம் விடுவதற்கான விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன் வாங்கியவர்கள், ஜாமீன்தார்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது என்னவெனில், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்க்கு பத்திரப்படுத்தப்பட்ட கடன் வழங்குநர் அடமானம் அல்லது பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது அதன் **ஆக்கப்பூர்வமான கவாதீனம் (Constructive Possession) சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் பெறப்பட்டுள்ளது. **சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்** (பத்திரப்படுத்தப்பட்ட கடன் வழங்குநர்)-க்கு செலுத்த வேண்டிய தொகையான **ரூ.38,23,999/-** (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது மட்டும்) **02.11.2026** அன்றைய தேதியிலான நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் **"உள்ளது உள்ளபடி", "எப்படி உள்ளதோ அப்படி", "இருக்கின்றவாறுதான்"** என்ற அடிப்படையில் **23-12-2026** அன்று ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

கடன்தாரர்கள் விவரம்: 1. M/s. லட்சுமி சோபா ஒர்க்ஸ், (இதன் பிரதிநிதியாக உரிமையாளர் திரு.ப. கணேசன்), எண்:158 A, மில் கேட், தாந்தோணிமலை, கரூர் - 639005. **2.திரு.ப.கணேசன், த/பெ. ஜெகநாதன்,** எண்:158 B, மில் கேட், தாந்தோணிமலை, கரூர் - 639005. **3.திருமதி. S. மீனா, க/பெ.ப.கணேசன்,** எண்:158 B, மில் கேட், தாந்தோணிமலை, கரூர் - 639005. **4. M/s.மீனா சோபா ஒர்க்ஸ், (இதன் பிரதிநிதியாக உரிமையாளர் திருமதி. S. மீனா),** எண்: 163 A/3, வடக்கு தெரு, மில் கேட், தாந்தோணி மலை, கரூர் - 639005.

குறிப்பு : எங்களது 089 கரூர் கிளையில் 4 - ஆம் நபர் வேண்டுகோள்படி, 3 - ஆம் நபர் உரிமையாளராக பிரதிநிதித்துவம் செய்தாலும், 2 & 3 - ஆம் நபர்கள் இணை இருப்புதாரராக இருப்பாலும், 2 - ஆம் நபர் பினையுதாரராக இருப்பாலும் 22-மார்ச்-2018 அன்று [DHARANI SPECIAL : S1212002002037] என்கிற கடன் கணக்கில் ரூபாய்2,00,000/- ஆண்டு வட்டி 14.50% நிதியதவி வழங்கப்பட்டு 02.11.2026 வரையிலான நிலுவைத் தொகை ரூபாய்21,35,514/-

திருணயிக்கப்பட்ட விலை, செலுத்தப்பட வேண்டிய பினை வைப்பு தொகை மற்றும் இதர விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

செலுத்த வேண்டிய பினை வைப்பு தொகை சமர்பிக்க கடைசி தேதி & நேரம்	22.12.2026, மாலை 04:00 மணி
மின் ஏல விற்பனையின் தேதி மற்றும் நேரம்	23.12.2026, நேரம்: மதியம் 12.00 - 01.00 மணி வரை
செலுத்த வேண்டிய பினை வைப்புத் தொகை, ஏலம் படியம் சமர்பிக்கும் இடம் மற்றும் தொடர்பு விவரங்கள்	சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், கரூர் கிளை, கதவு எண்.145, ஜவஹர்லால் பஜார், கரூர் - 639001 மின்னஞ்சல்: srinivasank@cityunionbank.in அலைபேசி எண்கள்: 7695569207, 9698976739
திருணயிக்கப்பட்ட விலை	ரூ.2,54,00,000/- (ரூபாய் இரண்டு கோடி நூற்று ஐம்பத்து நான்கு லட்சம் மட்டும்)
திருணயிக்கப்பட்ட விலையில் 10% பினை வைப்புத் தொகை	ரூ.25,40,000/- (ரூபாய் இருபத்து ஐந்து லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)
ஏல உயர்வுத் தொகை	ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்)
மின் ஏல இணையதளம்	www.auctionbazaar.com

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்து

திரு. ப.கணேசன், த/பெ.திரு.ஜெகநாதன் அவர்களுக்கு சொந்தமான சொத்து

ஸட்டம் 1: கரூர் பதிவு மாவட்டம், கரூர் மேற்கு சார் பதிவகம், கரூர் தாலுக்கா, தாந்தோணி கிரேட் III நகராட்சி, தற்போதைய கரூர் நகராட்சி, தாந்தோணி கிராமம், S. F. எண்.492/1,2,3 ஏக்கர் 7.47, S.F.எண்.493/6 ஏக்கர் 1.11, மொத்தம் ஏக்கர் 8.58. இதில் ஏக்கர் 1.87 1/2 வேலைபட்ட ஆக உருவாக்கப்பட்ட அதில் வீட்டு மனை எண்.11 நிலம் மற்றும் இதனுடன் இணைந்து அனைத்து தூண்டுகளும் பகுதிகளும். **அளவீடு :** கீழ் மேல் வடபுறம் 30 அடி, தென்புறம் 37 அடி, தென் வடல் மேல்புறம் 60 அடி, கீழ்புறம் 62 1/4 அடி ஆக மொத்தம் 1314 1/4 சதுரடி பரப்பளவு **நான்கு எல்லைகள் : மேற்கில்** : வீட்டு மனை எண்.12, **வடக்கில்** : 20 அடி அகல கீழ் மேல் ரோடு, **தெற்கில்** : வீட்டு மனை எண்.10, **ஸட்டம் 2 :** கரூர் பதிவு மாவட்டம், கரூர் மேற்கு சார் பதிவகம், கரூர் தாலுக்கா, தாந்தோணி கிரேட் III நகராட்சி, தற்போதைய கரூர் நகராட்சி, தாந்தோணி கிராமம், S.F.எண்.492/1,2,3 ஏக்கர் 7.47, S.F.எண்.493/6 ஏக்கர் 1.11, மொத்தம் ஏக்கர் 1.87 1/2 வேலைபட்ட ஆக உருவாக்கப்பட்ட அதில் வீட்டு மனை எண்.12 மற்றும் இதனுடன் இணைந்து அனைத்து தூண்டுகளும் பகுதிகளும். **அளவீடு :** கீழ் மேல் 30 அடி, தென் வடல் 60 அடி ஆக மொத்தம் 1800 சதுர அடி பரப்பளவு **நான்கு எல்லைகள் : வடக்கில்** : 20 அடி அகல கீழ் மேல் ரோடு, **கிழக்கில்** : வீட்டு மனை எண் 13, **மேற்கில்** : வீட்டுமனை எண் 11, **தெற்கில்** : வீட்டு மனை எண் 10.

விலங்கங்கள் : இல்லை

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, எங்களது வங்கியின் www.cityunionbank.bank.in இணையதளத்தை பார்க்கவும்.

இடம் : கும்பகோணம், தேதி: 04.11.2026 அதிகாரப்பூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம்: எண்.149, T.S.R. பெரியம் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, **CIN :** L65110TN1904PLC001287, **போன்:** 0435 - 2402322, **கபேக்ஸ்:** 0435 - 2431746, **இணையதளம்:** www.cityunionbank.com

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில் மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : கிராஸ்கட் ரோடு கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.கோஸ்டிரா பேர்ல் ஒஷன், தி ஃபிஷ் ஹவுஸ், எண் - 320, திருச்சி சாலை, விவேகானந்தா நகர், சிங்கா